C.C. No. 68/2016
Dated :30.08.2019
அசா.37,கோமதி(காவல் ஆய்வாளர்)
<u>சாட்சி மனுவின் பேரில் A2, A5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை நான்தான் தயார் செய்தேன். வழக்கின் புகார் தபால் மூலம் பெற்றேன். 26.8.2015ம் தேதி புகாரை பெற்றேன். தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டப்பிரிவு 81ன் படியான விசாரணை அறிக்கையின் அடிப்படையில் குற்ற வழக்கு பதிவு செய்ய கோரி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவவாறு கொடுகக்ப்பட்ட புகாரின் அடிப்படையில்தான் நான் வழக்கு பதிவு செய்யப்பட்டேன் என்றால் சரிதான், புகாரில் முதலாம் எதிரி மீது மட்டுமே நடவடிக்கை எடுக்க கோரி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 முதல் 17 வரையிலான மோசடி இனங்கள் முதலாம் எதிரியால் செய்யப்பட்டது என நிருபணம் ஆகியுள்ளதாலும், அதன் அடிப்படையில் வட்டியுடன் ரூ.3,76,200/ செலுத்திவிட்டார் என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் பணம் திருப்பி செலுத்தியதாக தெரிந்து கொண்டேன். ஆனால், முதலாம் எதிரி மட்டுமே திருப்பி செலுத்தியதாக எனது விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி தொகை எவ்வாறு கட்டப்பட்டது என்பது விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லையா என்றால் அது தேவையில்லை. நான் தேவையில்லை என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. மேற்படி முறைகேடு 30.6.2011 முதல் 17.7.2013 வரை நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். என்னுடைய விசாரணைக்கு முன்னால் கூட்டுறவு சங்க பிரிவு 81ன் கீழான அறிக்கையை படித்துவிட்டேன் என்றால் சரிதான். 81ன் கீழான விசாரணை அறிக்கையில் 2 மற்றும் 5ம் எதிரி முறைகேடு செய்ததாகவோ உடைந்தையாக இரந்ததததாகவோ கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி 17 மோசடி இனங்களம் பற்று சீட்டு மூலமாகவும், காசோலை மூலமாகவும் நடைபெற்றது என்றால் சரிதான் ஐந்தாம் எதிரி மல்லன் 9.5.2013ல்தான் என்.எஸ்.ரெட்டியூர் கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பேற்றார் என்றால் சரிதான். இவர் பொறுப்பேற்தற்கு முன்பு வரை தனி அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்கிது என்றால் சரிதான். ஐந்தாம் எதிரி பொறுப்பேற்பதற்கு முன்பு நடந்த மோசடி இனங்களின் கால கட்டங்களில் அ.சா.7, 8, 9 ஆகியோர் தனி அலுவலராக இதே சங்க்த்தில் பணியாற்றினார்கள் என்றால் சரிதான். அ.சா.9 ரங்கநாதன் கையொப்பம் செய்த காசோலைகள் மோசடி இனங்களில் அ.த.சா.ஆ.46, 48, 50 ஆக உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவைகள கையாடல் இனங்களில் வரவில்லை. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அ.சா.35 துரைராஜ் அவர்கள் தனது அறிக்கையில் முதலாம் எதிரி

மற்றும் 5 எதிரி இருவரும் அ.சா.23 சரவணனின் சேமிப்பு கணக்கில் ரூ.7,400/ இருப்பு இல்லாத நிலையில் பற்று சீட்டு மூலம் பணம் எடுத்ததாக கூறாமல் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். அதே போல் அறிக்கையில் கூறாத விசயமான அ.சா.20 சேகர் என்பவரின் சேமிப்பு கணக்கில் 1 மற்றும் 2 எதிரிகள் ரூ.5000/ எடுத்து சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதை அறிக்கையில் கூறாமல் போலீஸ் விசாரணையிலும், சாட்சியத்திலும் கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.20 சேகர் 2ம் எதிரி மீது என்னுடைய விசாரணையில் எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.23 சரவணன் 5ம் எதிரி மல்லன் மீது என்னுடைய விசாரணையில் எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.35 விசாரணை அதிகாரி கொடுத்த அறிக்கைக்கு முரனாக என்னிடத்தில் கொடுத்த வாக்குமூலத்தின் பெயரில் நான் அ.சா.35 மீது என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் அவர் முரனாக என்னிடம் எந்த வாக்குமூலம் கொடுக்கவில்லை. அ.சா.35 தனது அறிக்கையில் முதலாம் எதிரி மட்டுமே குற்றம் செய்ததாக குறிப்பிட்டு விட்டு பின்னிட்டு எனது விசாரணையில் 2, 5 எதிரிகளும் சேர்நது குற்றம் இழைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா35டம் கூடுதல் விசாரணை அறிக்கை ஏதும் பெறவில்லை. கூடுதல் விசாரணை அறிக்கை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கூட்டுறவு சங்கங்கத்திள் உள்ள சொசைட்டி முழுக்க முழுக்க 1ம் எதிரியான செயலாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும் என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்கங்களின் விதி 36, 38ன் படி சங்கத்தலைவரோ அவர் இல்லாத கால கட்டங்களில் தனி அலுவலரின் கட்டுப்பாட்டில் செயெலாளர் இயங்குவார். அவ்வாறு இருக்கும்பொழுது காசோலையில் கூட்டாக கையொப்பம் செய்யும் தனி அலுவலர் சங்க நடவடிக்கைகளை பற்றி கண்காணிக்கும் பொறுப்பும், கடமையும் தனி அலுவலருக்கு உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பொறுப்பாளியான தனி அலுவலரான அ.சா.7, 8, 9 அவர்கள் பணியாற்றிய கால கட்டங்களில் நடந்த மோசடி இனங்கள் குறித்து ஏதுவும் கண்டறிந்து நான் அ.சா.7, 8, 9 வசம் இது பற்றி கேட்டு விளக்கம் ஏதுவும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இது குறித்து சம்மந்தப்பட்ட துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நான் தெரிந்து கொண்டேன். என்ன துறை ரீதியான நடவடிக்கை எடுத்தார்கள் என்று என்னால் சொல்ல இயலாது. மோசடி சம்மந்தப்பட்ட ஆவணங்களை பராமரித்து வந்தது 1ம் எதிரியான செயலாளர் என்று என்னுடைய விசாரரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தலைவரின் ஆலோசனை பெற்று சங்கத்தின் சொத்துக்கள் மற்றும் ஆவணங்களை செயலாளர் பராமரித்து வந்தார் என்று தெரிந்து கொண்டேன். மோசடி இனம் 14 தொடர்பான எந்த பேரேடுகளிலும் 5ம் எதிரி கையொப்பம் செய்ததாக இல்லை என்றால் சரிதான் ஆனால் அன்றாட நிகழ்வுகளில் பேரேடுகளில் கையொப்பம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அந்த

பற்றுச்சீட்டில் செயலாளர் கையொப்பம செய்த நண்நம்பிக்கையில் தான் தலைவர் கையொப்பம் செய்தார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் செயலாளர் கையொப்பம் செய்தாலும், சம்மந்தப்பட்ட சேமிப்பு கணக்கில் போதிய இருப்பு இருக்கிறதா என்று கவனிக்க வேண்டிய பொறுப்பு தலைவருக்கு உண்டு. 2ம் எதிரி மதிய உணவு இடைவேளைக்கு சென்று விட்டு திரும்பிய உடன் 1ம் எதிரி சம்மந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு பணத்தை கொடுத்துவிட்டதாக கூறியதின் நம்பிக்கையின் அடிப்படையில் 2ம் எதிரி கையொப்பம் செய்தார் என்றால் சரியல்ல. 2, 5 எதிரிகள் இருவரும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் கையொப்பம் செய்தார்களே ஒழிய மோசடி இனங்கள் 14, 15 இனங்களுக்கும், இவர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2, 5 எதிரிகள் 1ம் எதிரிக்கோ, மற்ற எதிரிகளுக்கோ கூட்டாகவோ குற்ற உடைந்தையாகவோ இருக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், 2, 5 எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமில்லை என்று தெரிந்து கொண்டேன். நான் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்க விதி பிரிவு 81ன் கீழான விசாரணைக்கு முன்பே முதலாம் எதிரி கையாடல் தொகை முழுவதையும் வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்ட நிலையில் 2 மற்றும் 5 எதிரிகளுக்கு மேற்படி மோசடி இனத்தின் எந்த பொறுப்பும் இல்லை என்றே பொருள் என்றால் சரியல்ல. சேமிப்பு கணக்கு பேரேட்டில் இரண்டாம் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனால் கையொப்பம் செய்துள்ளார். 2, 5 எதிரிகளால் இந்த கூட்டுறவு சங்கத்திற்கு எந்த இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சரியான புலன் விசாரணை மேற்கொண்டிருந்தால் 2, 5 எதிரிகளை சாட்சியாகத்தான் விசாரித்திருக்க வேண்டும் என்றாலும், எதிரிகளாக சேர்க்க முடியாது என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அறிக்கை தவறானது என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்க விதி 81ன் கீழான அறிக்கைக்கு முரனாக சாட்சிகளின் வாக்கு மூலங்களை நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2,5 எதிரிகள் தவறான கணக்கு எதுவும் எழுதவில்லை என்றால் சரியல்ல. கூட்டாகவோ, உடந்தையாகவோ 2, 5 எதிரிகள் எவ்வித குற்ற எண்ணத்துடன் குற்றச் செயலில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. 2, 5 எதிரிகள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் செய்துள்ள கையொப்பம் குற்ற உடந்தையோ கூட்டாக குற்றம் செய்வது ஆகாது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 2, 5 எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

1, 3, 4 எதிரிகள் சார்பாக குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.